பதிவு எண். எம். 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 29 (12—7—68) வெள்ளி ★ வெளியூர்: ஆனி 30 (13—7—68) சனி [இதழ்: 24

750 இடங்களுக்கு 12,000 விண்ணப்பம்

சென்னை, ஜூலை 12—

தென் வட்டாரத்தில் பொறியியல் பட்டப் படிப்புக்கும், டிப்ளமோ படிப்புக்குமாக இவ்வாண்டு கூடுதலாக 750 இடங்கள் நடைமுறைப் பயிற்சி உதவித் திட்டத்தின்கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. இவற்றிற்கு மொத்தம் 12,000 பேர் விண்ணப்பம் அனுப்பியுள்ளனர்.

டெல்லியின் உறுதிமொழி எங்கே?

'மக்கட் தொகையை முக்கியமாகக் கொள்க'

மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவது பற்றி அண்ணா

டில்லி தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வற்புறுத்தல்

புதுடில்லி, ஜூலை 12

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நேற்று நடந்த விவாதத்தின் மூலம், மாநிலங்களுக்கு மத்திய அரசு மக்கள் தொகை அடிப்படையில் வழங்கும் நிதியுதவி 70 சதவிகிதத்திலிருந்து குறைக்கப்படும் என்றும், 50 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதத்துக்குள் நிர்ணயிக்கப்படும் என்று தெரிகிறது.

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில், 'நான்காம் திட்டத்துக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கும்போது மக்கட்தொகை அடிப்படையை முக்கியமாகக் கொள்ளவேண்டும்' என்று வற்புறுத்தினர்; 70 முதல் 80 சதவிகிதம் வரை மக்கட்தொகை அடிப்படையில் ஒதுக்கவேண்டும்' என்றார்.

'மக்கள் நெருக்கத்தின அளவையே, நிதி ஒதுக்குவதற்கான அடிப்படையாகக் கொள்ளவேண்டும்' என்று கேரளம் வற்புறுத்தியது; ஆனால் இந்த யோசனைக்கு அவ்வளவாக ஆதரவு இல்லை.

'பின்னடைந்துள்ள நிலையைப் பொறுத்தே மத்திய அரசின் உதவியும், மத்திய திட்டங்களும் ஒதுக்கப்பட வேண்டும்' என்று ஆந்திர மாநில முதலமைச்சர் பிரும்மானந்த ரெட்டி கூறினர்.

தனி நபர் வருமான அடிப்படையில் நிதி ஒதுக்கல்

பொதுவான உடன்பாடு

மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் உதவிக்கான கொள்கைபற்றி முதலமைச்சர்கள்—திட்டக் குழு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பொதுவானதோர் உடன்பாடு ஏற்பட்டது.

உதவி அளிப்பதற்கான கொள்கைகளை மத்திய அரசு நிர்ணயிக்கையில், ஒவ்வொரு மாநிலத்தின் தனி நபர் சராசரி வருமானத்தையும், தனி நபரின் சராசரி வருமானத்தைப் பெருக்குவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளையும் மனத்தில் கொள்ள வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டது.

"மக்கள் தொகை அடிப்படையில் மத்திய அரசு உதவியின் அளவு நிர்ணயிக்கப்பட வேண்டும்"

என்று மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், தமிழகம், மாராட்டிரம் ஆகியவை வற்புறுத்தின.

ஆனால், இராஜஸ்தான், பஞ்சாப், அரியானா, மத்தியப் பிரதேசம், மைசூர், ஒரிசா, காஷ்மீர் ஆகியவை 'மக்கட்தொகை அடிப்படைக்கு முக்கியத்துவம் தரக்கூடாது' எனக் கூறின.

கேரளமும் மக்கட்தொகை அடிப்படையை வற்புறுத்தியது.

'குறிப்பிட்ட பிரதேசங்கள் பொருளாதாரத் துறையில் பின்தங்கியுள்ளவையா என்பதைக் கவனித்து உதவி அளிக்க வேண்டும்' என்று மைசூர், ஆந்திரம், ஒரிசா, ஆகியவை கூறின!

'தனி நபரின் சராசரி வருமானத்தைக் கவனித்து உதவி அளிக்க வேண்டும்' என்று இராஜஸ்தான் வற்புறுத்தியது.

இப்போது மத்திய அரசின் உதவித் தொகையில் 70 சதவிகிதம், மக்கட்தொகை அடிப்படையில் தரப்படுகிறது; பாக்கி 30 சதவிகிதம், மாநிலங்களின் பின்தங்கிய நிலைமை—ராணுவ முக்கியத்துவம்— திட்டங்களைத் தொடர்ந்து அமல் நடத்தவேண்டிய நிலைமை முதலியவற்றைக் கவனித்து வழங்கப்படுகிறது.

அண்ணாவுக்கு 'டாக்டர்' பட்டம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்குகிறது

சென்னை, ஜூலை 12—

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேனுக்கும், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கட்கும், 'டாக்டர்' பட்டம் அளிக்க அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

இந்தப் பட்டமளிப்பு விழா வருகிற செப்டம்பர் 8-ஆம் நாள் நடைபெறவிருக்கிறது.

அதே நாளில் குடியரசுத் தலைவர், பொறியியல் கல்லூரி விடுதிக்கான புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுவார்; திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவையும் துவக்கி வைப்பார்.

மத்திய பள்ளியில் மீண்டும் இந்தித் திணிப்பு முயற்சி

சமூக இயல் பாடங்கள் இந்தி மொழியில் மட்டுமே கற்பிக்கப்படுமாம்

மத்திய பள்ளிகளில் இந்தியைப் பயிற்று மொழியாகத் திணிக்கும் மத்திய அரசின் முயற்சி மீண்டும் தலைதூக்கியிருக்கிறது சர்ச்சைக்குரிய இந்தப் பிரச்சினை, மத்திய கல்வியமைச்சர் திரு. திரிகுணசென் அளித்த உறுதிமொழியின் பலனாக அடங்கியிருந்தது.

இப்போது மீண்டும், மத்திய அரசின் கல்வித் துறையினர் தங்கள் இந்தித் திணிப்புக் கொள்கையை உறுதிப்படுத்தும் வகையிலேயே நடவடிக்கை எடுத்துவருகின்றனர்! கல்வி அமைச்சரின் உறுதி மொழியை யாரும் சட்டை செய்ததாகத் தெரியவில்லை!

முதல் வகுப்பிலிருந்து ஆறும் வகுப்புவரை இந்தியிலேயே சமூக இயல் பாடங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று மத்திய பள்ளிகளுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையைச் செயல்படுத்துவதில் மத்திய பள்ளிகள் ஈடுபட்டுள்ளன!

மத்திய பள்ளிகளின் பெயரை, இந்தியில், 'கேந்திரிய வித்தியாலயா' என்று மாற்றிவிட்டனர்!

மத்திய பள்ளிகளின் நிர்வாகம் கடந்த மார்ச் 29-ம் நாள் அனுப்பிய (எண் 7/68) கொள்கைச் சுற்றறிக்கையில் உள்ள ஒன்றையாவது செயல்படுத்த இப்போது ஏற்பாடு நடைபெறுகிறதாம்; அதாவது, 'சமூக இயல் பாடங்களை முதல் வகுப்பு முதல் ஆறும் வகுப்புவரை இந்தியிலேயே கற்பிக்க வேண்டும்' என்பதுதான் அந்த ஏற்பாடு.

அடுத்து, மத்திய பள்ளி நிர்வாகத்திடமிருந்து (எண் 12—2—/68 கே. வி. எஸ். (எஸ் பி.) மே 3) ஒரு சுற்றறிக்கை மத்திய பள்ளிகளுக்கு வந்தது; அதில், முதல் வகுப்பிலிருந்து ஆறும் வகுப்பு வரையில், இந்தியில் மட்டுமே சமூக இயல் பாடங்களை நடத்தும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதி வருமாறு:—

ஒன்றுவதிலிருந்து ஆறுவது வரையில் இந்தியில் மட்டுமே சமூக இயல் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

இந்தப் பாடங்களின் ஆங்கில மொழிப் புத்தகங்கள் பள்ளியின் நூலகத்தில் இருக்கும்.

ஒரு வகுப்புக்கு 5 புத்தகங்கள் வீதம் நூலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சந்தேகம் ஏற்படும்போது ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வதற்காகவே ஆங்கிலப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன.

மாணவர்கள் ஒப்பிட்டுப் பார்க்க விரும்பினால், நூலகத்தில் பார்த்துக்கொள்ளலாம்; ஆனால், வகுப்புகளில் இந்தி மொழியிலேயே கற்பிக்கப்படும்.

இந்தியில் எந்தெந்தப் பாடப் புத்தகங்களை வாங்க வேண்டும் என்பதும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது; அவை: ஹமாரா தேஷ்—பால பாக் (மூன்றும் வகுப்பு); ஹமாரா தேஷ் பாரத்—தஸ்ரா பாக் (4-ஆம் வகுப்பு); பாரத் அவுர் சம்சாஸ் (5-ஆம் வகுப்பு) அபினவ் சமாஜிக் அத்தியாயன் (ஆறும் வகுப்பு).

மார்ச் 29-ஆம் நாள் அனுப்பிய சுற்றறிக்கையினால் பெரும் சர்ச்சை எழுந்தது.

மானிட இயல்—சமூக இயல் பாடங்களை ஒன்று முதல் ஆறும் வகுப்பு வரை இந்தியிலேயே கற்பிக்க வேண்டும் என்றும், ஆங்கில வகுப்பை ரத்து செய்துவிட வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது; இதனால் இந்தி பேசாத பகுதி மக்களிடையேகொதிப்பு ஏற்பட்டது; '1963ம் ஆண்டைய ஆட்சிமொழிச் சட்டத்தின் இரு மொழிக் கொள்கையை மீறிய செயல் இது' என்று கண்டிக்கப்பட்டது; அந்தச் சுற்றறிக்கையைத்

(3-ம் பக்கம் பார்க்க)

'பயர்மென்'கள் வேலைநிறுத்தம் முடிவடையும்?

டெல்லியில் அண்ணா மற்றும் தென்னக முதல்வர்கள் முயற்சி

தென் பகுதி இரயில்வே—தென் மத்திய இர[illegible]வேக்களில் நடைபெறும் 'பயர்மென்'களின் வேலைநிறுத்தத்திற்கு முடிவுகட்ட தமிழகம் — கேர[illegible]ம் — ஆந்திரம்— மைசூர் முதல[illegible]ச்சர்கள் முயற்சித்துவருகின்றனர்.

தமிழக முதலமைச்சர் அண்ண[illegible] கேரள முதலமைச்சர் நம்பூ[illegible] பாடு ஆகியோர், தென் [illegible] இரயில்வே ஊழியர் [illegible] தலைவர் கே. அனந்தன் [illegible] எம்.பி. அவர்களுடன் [illegible] தனர்.

பின்னர் அண்ணா, பிரும்மானந்த ரெட்[illegible], நம்பூதிரிபாடு, வீரேந்திர பட[illegible] ஆகிய நான்கு தென்னக மு[illegible]வர்களும் விவாதம் நடத்தி [illegible] 'மத்திய அரசு விரைவில் [illegible]ட்டுக்கு வரவேண் [illegible]ள் விரும்பினர். [illegible] தலைமை [illegible]ம், இரயில்வேத் [illegible]ச்சர் பரிமள் கோசுட [illegible]பூதிரிபாடு, தொடர்பு [illegible]வார்.

தொழில் தகராறுகளில் அமைச்சர்கள் தலையீடா?

குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் மாதவன் பதில்

இ. தே. தொழிற் சங்கப் புகாருக்கும் மறுப்பு

சென்னை, ஜூலை 12—

"போலீசார் தொழிலாளர்களிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதாகத் தொழிலாளரின் சில பிரதிநிதிகள் குறைகூறினர்; போலீசார் முரட்டுத்தனமாக நடந்துகொண்ட சில சந்தர்ப்பங்களைத் திட்டவட்டமாகச் சொல்லுமாறு நான் இந்தியத் தேசியத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும், சில நிர்வாகிகளின் பிரதிநிதிகளையும் கேட்டுக்கொண்டேன்; ஆனால் அவர்களுடைய பதில்கள் தெளிவாக இல்லை; அவர்களால் திட்டவட்டமாக அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கூற இயலவில்லை. இப்போது நிலைமை திருந்தியுள்ளதாக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

"தொழிலாளர்களும், நிர்வாகிகளும் போலீசாரைக் குறைகூறுவதாகவும், அரசு என்ன செய்ய வேண்டுமென்று இருதரப்பினரும் விரும்புகிறார்கள் என்றும் நான் இருதரப்புப் பிரதிநிதிகளையும் கேட்டேன்.

"அமைச்சர்கள் தலையிடுவதாகப் புகார் கூறப்படுகிறது. நிர்வாகிகளும்—தொழிலாளர்களும், 'அரசு தலையிட வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டனர். நீதி வழங்குவதற்கு அரசு தலையிட வேண்டியது அவசியமாகிறது. சட்டம்—அமைதியைப் பாதுகாக்கும் கட்டம் ஏற்படும்போது அரசு நடவடிக்கை எடுக்காமல் முடியாது; ஆகவே, 'தொழில் தகராறுகளில் அமைச்சர்கள் தலையிட்டார்கள்' என்ற பேச்சுக்கே இடமில்லை!

"சமரச முடிவுகள்மீது அரசு உடனுக்குடன் உத்தரவுகளைப் பிறப்பிக்கவில்லை என்பது மற்றோர் குற்றச்சாட்டு. 'அத்தகைய சந்தர்ப்பங்களே இல்லை' என்று இ. தே. தொழிற்சங்கத்தைத் தவிர மற்றத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

"வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளரை மீண்டும் வேலைக்கு வைத்துக்கொள்ளுமாறு அரசு நிர்ப்பந்தம் கொண்டுவந்ததாக மற்றோர் புகார் கூறப்படுகிறது. இரக்கத்துடன் முடிவுகளை மறு பரிசீலனை செய்யுமாறுதான் நிர்வாகிகளை அரசு கேட்டுக் கொண்டது; இதில் நிர்ப்பந்தம் எதுவும் இல்லை; அரசினர் வேண்டுகோள் மாத்திரமே விடுத்தனர். அந்த வேண்டுகோளை நிர்வாகிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

"மிகவும் ஒழுங்கு மீறி நடந்துகொண்ட தொழிலாளியைக்கூட வேலைநீக்கம் செய்வதை அரசு விரும்பவில்லை என்றும், குற்றங்களுக்குத் தண்டனை விதிப்பதில் அரசுக்கு நம்பிக்கையில்லை என்றும் கூறப்பட்டுள்ள கருத்து வரம்பு மீறியதாகும்.

"தீர்ந்துபோன விவகாரங்களைக்கூட மீண்டும் பரிசீலனை செய்யலாம் என்று இ. தே. தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட எல்லாத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் ஒப்புக்கொண்டனர்; 'இதில் சிரமம் ஏற்படும்' என்று நிர்வாகிகள் கூறியபோது, இந்தப் பிரச்சினையை வருங்காலத்தில் கவனிப்பதாகக் கூறினேன்.

"பகிரங்கமாக ஒழுங்கு மீறி நடந்துகொண்ட தொழிற்சங்கத் தலைவர்களுக்கு அரசு ஆதரவு காட்டிவந்திருக்கிறதென்பதற்கு யாரும் சான்று அளிக்க முடியவில்லை."

இவ்வாறெல்லாம் சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் செய்தியாளர்களிடம் விளக்கியுள்ளார்.

தொழில் தகராறுகளில் அமைச்சர் தலையிடுவதாகவும், போலீசார் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியதாகவும் தேசியத் தொழில் உறவுக் கமிஷனின் ஆய்வுக் குழு, தமிழக அரசின்மீது குற்றஞ்சாட்டியிருப்பதை அமைச்சர் மறுத்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் வேண்டுமென்றே சுமத்தப்பட்டிருப்பதாகவும் அரசியல் நோக்கம் உள்ளவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் மாதவன் மேலும் கூறியதாவது:—

"தொழிலாளர்களின் பிரதிநிதிகளும்—நிர்வாகிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய தொழில் உறவு ஆலோசனைக் குழுக்களின் கூட்டம் தனித் தனியாக நடைபெற்றன.

'தேசியத் தொழில் கமிஷனின் ஆய்வுக் குழு, மற்ற மாநில அரசுகளின் கருத்துக்களைக் கேட்டபோதிலும், தமிழக அரசுப் பிரதிநிதியின் கருத்துக்களைக் கேட்கவில்லை' என்று நான் தொழிலாளர் பிரதிநிதிகளிடமும், நிர்வாகிகளின் பிரதிநிதிகளிடமும் விளக்கினேன்.

தேசியத் தொழில் கம... தலைவர் திரு. கஜேந்திர கட்... ஆய்வுக் குழுவின் அறிக்... பற்றித் தமக்கு எ... யாது என்று... னர்.

இந்தியத் தேசிய... கம் நீங்கலாகத... ஆலோசனைக் குழுவ... பிரதிநிதிகளும், 'தொ... ஷன் முன்பு ஆய்வுக் குழுவின் அறிக்கையைக் கண்டனம் செய்யவேண்டும்' என்றும், 'மறுக்க வேண்டும்' என்றும், 'ஆய்வுக் குழுவின் அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் முக்கியமானவை' என்றும் சுட்டிக் காட்டினர்,

'ஆய்வுக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பிரச்சினைகள் சரியல்ல' என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ள காலத்தில் தொழிலாளர்களுக்கு வாழ்க்கை உதவிப் பணம் தரப்படவேண்டும் என்றும், இதற்காக மாதிரி—நிரந்தர விடுதலையைத் தகுந்தவாறு திருத்த வேண்டுமென்றும் ஆலோசனைக் குழுக்கள் ஒப்புக்கொண்டன.

மே நாளை விடுமுறை நாளாக அறிவிப்பதற்குத் தேசிய விழா விடுமுறை நாள் சட்டத்தைத் திருத்துவதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

தொழிற் சங்கங்களிடையே போட்டா போட்டியைத் தவிர்ப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இ. தே. தொழிற் சங்கப் புகாருக்குப் பதில்

...நில தொழில் ஆலோசனைக் ...ழுவைத் திருத்தி அமைப்ப... அரசு, இ. தே. தொழிற் ...திடம் பாரபட்சம் காட்டி ...கச் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்குப் பொருளில்லை.

மாநிலத் தொழில் ஆலோசனைக் குழு யோசனைகளைத் தெரிவிக்கலாம்; அவற்றை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

ஆகவே, தொழிலாளர் சம்பந்தப்பட்ட எல்லா சங்கங்களின் கருத்துக்களையும் அறிய அரசு விரும்புகிறது.

ஆலோசனைக் குழுவில் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு பின்பற்றியுள்ளது.

இ. தே. தொழிற் சங்கத்திற்கு 5 பிரதிநிதிகள் இருந்தாலும், அவர்கள் ஒரு கருத்தைத்தான் தெரிவிக்கப் போகிறார்கள். உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற வாதத்தை நான் ஏற்கத் தயாராக இல்லை.

தொழிலாளரின் பல்வேறு நிறுவனங்களுக்கும் பிரதிநிதித்துவம வழங்க முயன்றிருக்கிறோம். ஆகவே, நாங்கள் பாரபட்சம் காட்டவில்லை.

இ. தே. தொழிற் சங்கத்திற்கு மற்றோர் பிரதிநிதி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டால் அதைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்

கல்வி போதனை

மாநிலத் தொழில் ஆலோசனைக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது, தொழிற்சாலைகளின் தொழிலாளிகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பதற்கு உத்தரப் பிரதேசத்தில் இருக்கும் முதியோர் கல்வித் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று தொழிலாளரின் பிரதிநிதிகள் யோசனை கூறினர். ஒரு திட்டம் தயாரிக்குமாறு அரசு, சம்பந்தப்பட்ட இலாகாவைக் கேட்டிருக்கிறது.

பல்கலைக் கழகத்தில் தொழில் உறவு சம்பந்தமாக ஒரு தனிப் படிப்பை ஏற்படுத்துவதற்கு உதவுமாறு அரசு சார்பாகத் தொழில் நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

ஆகஸ்டு மாத வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண் சம்பந்தமாக நிபுணர் குழு அளித்த அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்கு குழு ஒப்புக் கொண்டது.

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வளிப்பு

தமிழக அரசு தீட்டியுள்ள திட்டம்

மத்திய அமைச்சரிடம் அண்ணா விளக்கம்

முழு உதவியளிப்பதாக டில்லி உறுதிமொழி

புதுடில்லி, ஜூலை 11

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரவிருக்கும் தமிழ் மக்களைக் குடியமர்த்துவதற்காகத் தமிழக அரசு தீட்டியுள்ள திட்டங்கள்பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள், டில்லியில் மத்திய அமைச்சர் ஜெய்சுக்லால் ஹாத்தியைச் சந்தித்து விளக்கிக் கூறினார். ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக அண்ணா அவர்கள், மத்திய அமைச்சருடன் திட்டம் குறித்து விரிவாக விவாதித்தார்.

இலங்கத் தமிழர்களுக்கான மறுவாழ்விப்புத் திட்டம் பற்றி மத்திய அரசு முழுத் திருப்தி கொண்டிருப்பதாகவும், அதற்கான முழு உதவியையும் டில்லி அளிக்கும் என்றும் அமைச்சர் ஜெய்சுக்லால் ஹாத்தி, அண்ணா அவர்களிடம் உறுதியளித்ததாகத் தெரிகிறது.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியதாவது:—

"இலங்கைத் தமிழ் மக்களைக் குடியமர்த்துவதற்கும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் பழத் தோட்டங்களும், காப்பி—தேயிலைத் தோட்டங்களும் ஏற்படுத்தப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்களைக் குடியமர்த்துவதற்காக நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அந்தமான் தீவிலும் கணிசமான அளவு நிலம் ஒதுக்கித் தருமாறு மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். ஏற்கனவே தமிழக அரசு அதிகாரி ஒருவர் அந்தமானுக்குச் சென்று இது சம்பந்தமாக ஆராய்ந்து வந்து, தமது அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தமிழக அரசு தயாரித்துள்ள இத்திட்டங்கள் குறித்து மத்திய மறுவாழ்வளிப்பு அமைச்சர் ஜெய்சுக்லால் ஹாத்தி மிகவும் திருப்தியுற்றார்; முழு ஆதரவையும் தருவதாக உறுதி அளித்துள்ளார்.

குடியமர்த்தப்படும் இலங்கைத் தமிழர்களுக்கு அளிக்கப்படும் விவசாய நிலத்தின் சராசரி மதிப்பு ஒரு ஏக்கருக்கு ரூ 3,000 என்றும் தேயிலைத் தோட்ட நிலத்துக்கு ரூ. 9,000 என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது நிதி உதவி தருவதாக மத்திய அரசு உறுதி அளித்துள்ளது.

இலங்கையிலிருந்து வரும் தமிழ் மக்களின் முதல் பகுதியினர் இவ்வாண்டு டிசம்பர் அல்லது சனவரியில் வரத் தொடங்குவர். அவர்களை வரவேற்பதற்காக மண்டபத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன, அவர்களது நன்மைக்காக மருத்துவமனை ஒன்றும் அங்கு அமைக்கப்படும்.

இராமேசுவரத்திலிருந்து மண்டபம்வரையில் போக்குவரத்தைச் சமாளிக்க ரூ. 17 இலட்சம் அல்லது ரூ. 18 இலட்சம் செலவில் தார்ச் சாலை போடப்படுகிறது."

பிறகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், திட்டக்குழு உறுப்பினர் ஆர் வெங்கட்ராமனையும் சந்தித்துப் பேசினார்.

இலஞ்சப் பெருச்சாளிகள் சிக்கின!

இருபொறியர்கட்குக் கடுங்காவல் — அபராதம்

புதுடில்லி ஜூலை 12—

ஒரு காரிசன் எஞ்சினீயரும், ஒரு உதவி காரிசன் எஞ்சினீயரும் முறையே ரூ 10 ஆயிரம்— ரூ 5 ஆயிரம் இலஞ்சம் கோரியதாக அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய புலன் விசாரணைக் குழு இந்த வழக்கை விசாரித்தது.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓராண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முறையே ரூ. 1000; ரூ. 500 அபராதமும், அதைக் கட்டத் தவறினால் முறையே இரண்டு மாதமும், ஒரு மாதமும் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும், கல்கத்தாவைச் சேர்ந்த பெரிய காண்டிராக்டர் ஒருவரிடம் பத்தாயிரம் ரூபாயும், ஐயாயிரம் ரூபாயும் இலஞ்சம் கேட்டார்கள். ஜோர்ஹாட்டில், 1964 ஆகஸ்டு மாதத்தில் அவர்கள் கண்ணிவைத்துப் பிடிக்கப்பட்டார்கள்.

தமிழக அரசின் ஒத்துழைப்பு

மத்திய அமைச்சர் பெருமிதம்

புதுடில்லி, ஜூலை 12—

'இலங்கைத் தமிழர்களைக் குடியமர்த்த மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழக அரசினரும் முதலமைச்சர் அண்ணா அவர்களும் நன்கு ஒத்துழைப்பு நல்குகின்றனர்; அண்ணா அவர்கள் பெருந்தகையாளர்.

"அண்மையில் சென்னையில் அண்ணா அவர்களைச் சந்தித்தேன்; இலங்கைத் தமிழர்களுக்குத் தோட்டங்கள் அமைத்துத் தரும் பணியைத் துரிதப்படுத்தி 7 ஆண்டுகளில் நிறைவு செய்யவேண்டும்' என்று சொன்னேன்; அதனை அவர் ஏற்றுக் கொண்டார்"

இவ்வாறு, மத்திய அரசின் அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சர் டி. ஆர். சவான் புகழ்ந்துரைத்தார்.

இலங்கை—பர்மா தமிழர் நிலை என்ன?

இலங்கைத் தமிழர்களைக் குடியமர்த்தும் திட்டம் பற்றி மத்திய அமைச்சர் விளக்கியிருப்பதாவது:—

பர்மாவிலிருந்து 52 ஆயிரம் குடும்பத்தினர் அதாவது ஒன்றரை இலட்சம் பேர் அகதிகளாக வந்தனர்; அவர்களைக் குடியமர்த்தி விட்டோம்; ஆனால், இலங்கையிலிருந்து அகதிகளாக வருபவர்களைக் குடியமர்த்துவது கடினமான பிரச்சினையாகும்.

பர்மாவிலிருந்து அகதிகளாக வந்தவர்களில் பெரும்பாலோர் வியாபாரிகள்; அரசாங்கம் அளித்த ஊக்கத்தோடு அவர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவிட்டார்கள்; வர்த்தகத்திற்கும் நல்ல வாய்ப்பு இருக்கிறது.

சென்னையில் கடற்கரை இரயில்வே நிலையம் அருகே பர்மாத் தமிழர்கள், 'பர்மா பஜார்' அமைத்து வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்; வர்த்தகமும் நன்கு நடைபெறுகிறது. அங்கு கடைகள் நடத்த தமிழக அரசும் அனுமதித்திருக்கிறது.

சென்னையில் ஜார்ஜ்டவுன் பகுதி சுறுசுறுப்பான வர்த்தகப் பகுதி. மக்கள் நெருக்கமான இடம். இந்த இடத்தில் 20 பர்மாத் தமிழர்கள் ஒரு இடம் பிடித்து கூட்டுறவு முறையில் அச்சகம் நிறுவி நடத்துகிறார்கள்.

ஆனால் இலங்கையிலிருந்து அகதிகளாக வருபவர்கள் வர்த்தகர்கள் அல்லர்; வருபவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலில் ஈடுபட்டவர்கள். இலங்கைத் தமிழர்களைக் குடியமர்த்தும் பிரச்சினை கடினமானதாகும். இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழகம், மைசூர் மாநிலங்களில் காப்பி, ரப்பர் தோட்டங்கள் அமைத்துத் தர வேண்டும்.

பர்மாவிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் ஒன்றரை இலட்சம் பேர் என்றால் இலங்கையிலிருந்து வரவிருப்பவர்கள் 5 இலட்சத்து 25 ஆயிரம் பேர்களாகும். இவர்களைக் குடியமர்த்த 15 ஆண்டுக் காலத்திற்கு 150 கோடியிலிருந்து 200 கோடி ரூபாய் தேவைப்படும்.

பதவி ஏற்க மறுப்பு

பம்பாய், ஜூலை 11—

இந்தியாவின் அட்டர்னி-ஜெனரல் பதவியை ஏற்க பம்பாயின் பிரபல வழக்கறிஞர் என். ஏ. பால்கிவாலா மறுத்துவிட்டார்.

மேலை நாட்டினரும் அணியும் வகையில் கைத்தறிச் சேலை

காலத்திற்கேற்ப கவர்ச்சியான மாதிரிகளை உருவாக்கவேண்டும்

ஏற்றுமதியைப் பெருக்க அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன் யோசனைகள்

சென்னை, ஜூலை 10—

வெளிநாடுகளில் கிராக்கி இருக்கக்கூடிய துணி வகைகளை உற்பத்தி செய்யுமாறு கைத்தறித் துணி உற்பத்தியாளர்களை, தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கேட்டுக்கொண்டார்; 'மேற்கத்திய நாட்டுப் பெண்மணிகள் அணியக்கூடிய புடவைகளைத் தயாரிக்கலாம்' என்றும் அவர் யோசனை கூறினர்.

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய திருவாளர்கள் நல்லி குப்புசாமி, நல்லி இரங்கசாமி ஆகியோருக்குப் பட்டு — கைத்தறித் துணி வணிகர்கள் அளித்த வரவேற்புக்குத் தலைமை வகித்து அமைச்சர் பேசினர். அந்த இருவரும் 46 நாட்கள் சுற்றுப்பயணத்தில் 75 நகரங்களுக்குச் சென்றிருந்தனர்.

அமைச்சர் இரா நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"கைத்தறித் துணி அணிவதை மக்கள் தங்கள் கடமையாகக் கருத வேண்டும்; மாநிலத்தில் உள்ள மக்களின் துணித் தேவையில் மூன்றில் ஒரு பங்குதான் கைத்தறியில் உற்பத்தியாகிறது; அப்படியிருந்தும், மாநிலத்தில் ஏராளமான கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது.

காலத்தின் மாற்றத்திற்கேற்பத் தொழில் துறையிலும் மாற்றம் ஏற்பட்டால்தான் வாணிபத்தைப் பெருக்க முடியும்.

'எப்படிப்பட்டதை விரும்புகின்றனர்' என்பதை மட்டுமல்ல— 'இப்படிப்பட்டதை விரும்ப வேண்டும்' என்ற முறையிலும் மேலை நாடுகளில் 'பேஷன்'களை உண்டாக்குகின்றனர்.

ஜப்பான் நாட்டு விஞ்ஞானி ஒருவர் தமிழ்நாட்டுக்கு வந்து, இங்கிருக்கும் குத்துவிளக்கு ஒன்றை எடுத்துப் பார்த்துவிட்டு, 'இந்த நாடு உருப்படாது' என்றார்; ஏனென்றால், ஒரு பொருள் ஏழு தலை முறையானாலும் நீடித்திருக்கக்கூடியதாக இருக்கிறது; இப்படி இருந்தால் தொழில் துறையில் முன்னேற்றம் எப்படி ஏற்படும்? தொழிலாளருக்கு எவ்வாறு வேலைவாய்ப்புக் கிடைக்கும்?' என்று கேட்டார்.

நம்முடைய நாட்டிலிருந்து மூலப் பொருள்கள் அதிகமாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன; செய் பொருள்களின் ஏற்றுமதி அதிகரிக்கவேண்டும்; அப்போதுதான் நாம் இலாபம் பெறமுடியும்.

காடு—கரம்பு—ஏரி குளமாகவே கடந்த 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அமெரிக்க நாடு, இன்றையத் தினம் உலகத்தையே விலைக்கு வாங்கத் தக்கவிதத்தில் டாலர் நாடாகத் திகழ்கிறது; அவர்களின் புது முயற்சிதான் அதற்குக் காரணமாகும்.

தென்னகத்திலிருக்கின்றவர்களுக்கு நல்ல அறிவாற்றலும், செயல் திறமும் இருக்கின்றன;

இப்போது ரூ. 9 கோடி அளவுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதியாகி இருக்கின்றன; அதை இந்த ஆண்டில் ரூ. 15 கோடி அளவுக்கு உயர்த்தத் தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொண்டுள்ளது.

நாகரிகமடைந்து வரும் ஆப்பிரிக்காவிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும், மத்தியக் கிழக்கு நாடுகளிலும் சந்தையைப் பிடிக்கும் வகையில் நாம் நல்ல கவர்ச்சியை கைத்தறியில் உண்டாக்க வேண்டும்.

மேலை நாட்டுப் பெண்களுக்கு நம் நாட்டுக் கைத்தறி—பட்டுச் சேலைகளின் மீது அதிகக் கவர்ச்சியிருக்கிறது; ஆனால் சேலைகளைக் கட்டும் பழக்கம் அவர்களுக்கு இல்லை; கட்டினாலும் இருக்காது; இருந்தாலும் அவர்களால் நடக்க முடியாது; ஆகவே, சட்டை—கால் சட்டை ஜாக்கெட்டைப் போல் புடவையையும் அளவுக்கேற்றபடி 'ரெடிமேடு' சேலைகளாகத் தயா

(4-ம் பக்கம் பார்க்க)

வ. ஆ. மாவட்டம்

கலவை, கலசப்பாக்கம் தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல்

வ. ஆ. மாவட்டம் கலவை, கலசப்பாக்கம் தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல், 17–7–68 புதன்கிழமையன்று முறையே காலை 10 மணிக்கும், மாலை 4 மணிக்கும் மாவட்டச் செயலாளர் திரு. இரா. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

வ. ஆ. மாவட்ட நகரக் கிளைகளின் தேர்தல்

வடாற்காடு மாவட்டத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்ட கீழ்க்காணும் நகரக் கிளைகளின் தேர்தல், கீழ்க்காணும் நாட்களில் மாவட்டச் செயலாளர் திரு. இரா. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும் என்று இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

15--7--68

ஆற்காடு : காலை 10 மணி

16--7--68

இராணிப்பேட்டை : காலை 10 மணி

அரக்கோணம் : மாலை 4 மணி

இளமுருகு உடல்நிலை

சென்னை, ஜூலை 11—

கார் விபத்துக்குள்ளாகி சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தோழர் இளமுருகு அவர்களை, 'எக்ஸ்-ரே' எடுக்கப்பட்டது.

வலது கை எலும்புகள் நன்கு கூடியிருப்பதாக டாக்டர்கள் கூறினர்.

வலது கைக்கட்டுகள் அவிழ்க்கப்பட்டு கடந்த நாற்பது நாட்களாகப் படுத்த படுக்கையாக இருந்த இளமுருகு, தற்போது சிறிது நடக்கிறார். ஜூலை 15-ம் நாள், மருத்துவமனையிலிருந்து வீடு திரும்புவார் எனத் தெரியவருகிறது.

சிகிச்சை அளித்த டாக்டர்கள் எம். நடராசன், சௌந்தரபாண்டியன், சுப்பிரமணியம் ஆகியோர், 'மருத்துவமனையிலிருந்து திரும்பிய பின்னரும், நாள்தோறும் மருத்துவமனைக்கு வந்து, தசை நரம்புப் பயிற்சி சிகிச்சை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்' எனக் கூறியுள்ளனர்.

மணப்பாறை நகரக் கிளைத் தேர்தல்

ஆணையாளர்

ஜி. பராங்குசம் எம்.எல்.சி.

"ஏற்கனவே அறிவிக்கப்பட்டதையொட்டி திருச்சி மாவட்டம் மணப்பாறை நகர எல்லைக்குள் அடங்கிய மஞ்சம்பட்டி, குமாரப்பட்டி, கள்ளிப்பட்டி, கண்ணுடையாம்பட்டி, கலிக்கப்பட்டி, மணப்பாறை ஆகிய பகுதிகளின் பேரால் தனித்தனியாகச் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் மணப்பாறை நகரக் கிளைத் தேர்தல்கள் 14–7–68 அன்று காலை 10 மணிக்கு மாவட்டச் செயலாளர் சார்பான ஆணையாளர் திரு. ஜி. பராங்குசம் அவர்கள் தலைமையில் நடைபெறும்"

என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

செயற்கை அரிசி உற்பத்தித் தொழிற்சாலை

செயற்கை அரிசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று இந்தோனேஷியாவில் பாண்டுங் நகரில் திறக்கப்பட்டுள்ளது.

மரவள்ளிக் கிழங்கு, மொச்சை, மக்காச் சோளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி செயற்கை அரிசியை உற்பத்தி செய்கிறார்கள்.

அரிசியில் என்னென்ன சத்துப் பொருள்கள் உண்டோ அவை அனைத்தும் இந்தச் செயற்கை அரிசியில் இருக்கின்றனவாம்.

'தேகாட்' அரிசி என்று இதற்கு இந்தோனேஷிய அதிபர் சுகார்தோ பெயர் வைத்திருக்கிறார்.

செயற்கை அரிசியின் விலை, அரிசி விலையைவிட 20 சதவிகிதம் குறைவானது.

தேசிய பாதுகாப்பு நிதி

புதுடில்லி, ஜூலை 8—

இந்த ஆண்டு ஜூன் 29-ம் நாள் வரை பாதுகாப்பு நிதிக்கு ரூ. 80 84 கோடி வரை வழங்கப்பட்டிருக்கிறது.

இதில், 1965-ம் ஆண்டு செப்டம்பர் முதல் நாளுக்குப் பிறகு ரூ. 20.21 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்பட்டுள்ள தங்கத்தின் மதிப்பு ரூ. 1.16 கோடியாகும்.

ஜூன் 29-ம் நாள்வரை, இந்த நிதிக்கு 24 74 இலட்சம் கிராம் எடையுள்ள தங்க நகைகள், ஆபரணங்கள் முதலியவையும், 15.66 இலட்சம் கிராம் வெள்ளிச் சாமான்கள், நகைகள் ஆகியவையும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

தி. மு. கழக பெருநகரக் கிளைத் தேர்தல்கள்: 14---7---68

1. கீழ்க்காணும் பெருநகரக் கிளைகளுக்கான தேர்தல்கள். 14—7—68 ஞாயிறன்று, மாவட்டச் செயலாளர் அனுப்பும் ஆணையாளரின் தலைமையில் நடைபெற வேண்டும்.
2. ஒவ்வொரு நகரிலும் அந்தந்த உட்கிளை(வார்டு கிளை)களிலிருந்து முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்கள், மற்றும் நகரக் கிளைக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர் மட்டுமே பெருநகரக் கிளைத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமைபடைத்தவராவார்கள்.
3. பெருநகரக் கிளைத் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை படைத்த பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் தலைமைக் கழகத்திலிருந்து நேரடியாக 'பெருநகரக் கிளைப் பிரதிநிதிச் சீட்டு' அனுப்பப்பட்டுள்ளது. அந்தச் சீட்டு (கார்டு) உள்ளவர்கள் மட்டுமே தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ள உரிமையுள்ளவர்களாக ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.
4. பெருநகரக் கிளைகளின் தேர்தல் மாவட்டச் செயலாளரால் அனுப்பி வைக்கப்படும் ஆணையாளரின் தலைமையில்தான் நடைபெற வேண்டும். தேவையானால், மாவட்டச் செயலாளர் கேட்டுக்கொள்வதற்கேற்ப. தலைமைக் கழகத்தின் பிரதிநிதியின் தலைமையில் தேர்தல் நடைபெறும்.
5. பெருநகரக் கிளையின் எந்தப் பொறுப்புக்கும் போட்டியிடும் எந்த உறுப்பினரும் குறைந்தது ஐந்தாண்டுக்காலமாவது கழகத்தில் தொடர்ந்து உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.
6. பெருநகரக் கிளைத் தேர்தல்களில் போட்டியிடுபவர்மீது, 'ஐந்தாண்டுக்காலம் தொடர்ந்து உறுப்பினராக இல்லை' என்ற ஐயம் எழுப்பப்படுமாயின்—அவர் ஐந்தாண்டு தொடர்ந்து உறுப்பினராக இருந்து வருவதாகத் தலைமைக் கழகத்திலிருந்து சான்றிதழ் பெருதவராக இருந்தால்—ஏற்கனவே நிர்வாகப் பொறுப்பில் இருந்த இருவர், அவர் ஐந்தாண்டுக்கால உறுப்பினர் என்பதற்கான உறுதியளிப்பின், அவர் வேட்பு மனுவை ஆணையாளர் ஏற்றுக்கொள்வார். பின்னர், தலைமைக் கழகத்தால் ஆராய்ந்ததற்குப் பிறகு, அளிக்கப்பட்ட உறுதி தவருயின் உறுதியளித்தவர்கள் மீதும் குறிப்பிட்ட வேட்பாளர்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.
7. பெருநகரக் கிளையின் அலுவலாளர், மேலமைப்புப் பிரதிநிதிகளுக்கான தேர்தல்களில்: அந்தந்த பெருநகரத்தைச் சார்ந்த உறுப்பினர் யாரும் போட்டியிடலாம். (ஆனால், தேர்தல்களில் வாக்களித்துத் தேர்ந்தெடுப்பவர்கள் தலைமைக் கழகத்திலிருந்து பிரதிநிதிச் சீட்டுப் பெற்ற பிரதிநிதிகளே ஆவர்.)
8. பெருநகரக் கிளைத் தேர்தல்கள்—அவைத் தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகிய நான்கு அலுவலாளர்களையும், வட்டக் கழகத்திற்குப் பத்துப் பிரதிநிதிகளையும், செயற்குழு உறுப்பினர்களாக 15 பேரையும் முறைப்படி முறையே தேர்ந்தெடுக்க வேண்டும்.
9. வட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், அந்தத் தகுதியினாலேயே பெருநகரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக ஆகமாட்டார். அவர், செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்களில் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்படலாம்.
10. எந்த ஒரு பொறுப்புக்கான தேர்வானாலும், அதில் போட்டியிட விரும்புபவர்கள் அதற்குரிய விண்ணப்பத் தாளை நிறைவு செய்து, முன்மொழிபவர்—வழிமொழிபவர் கையொப்பங்களுடன் போட்டியிடுபவரோ, வழிமொழிபவரோ தேர்தல் ஆணையாளரிடம் முறைப்படி உரிய கட்டணத்துடன் சேர்ப்பிக்க வேண்டும்.
11. பெருநகரக் கிளைத் தேர்தல்களின் எந்தப் பொறுப்புக்கு ஆனாலும் (செயற்குழு உறுப்பினர் பொறுப்பு உட்பட) போட்டியிடும் தோழர்கள், தங்கள் தங்கள் வேட்பாளர் விண்ணப்பத் தாளுடன் ரூ. 2 விண்ணப்பக் கட்டணமாகத் தேர்தல் ஆணையாளரிடம் செலுத்தி அவர் கொடுக்கும் இரசீதினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் தொகை போட்டியிடுவதிலிருந்து முன்கூட்டியே விலகிக்கொண்டால் தவிர, எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.
12. அந்தந்தப் பொறுப்புகளுக்குப் போட்டியிட்ட தோழர்கள் அனைவராலும் செலுத்தப்பட்ட தொகை முழுவதையும், முறைப்படி தலைமைக் கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கும் பொறுப்பைத் தேர்தல் ஆணையாளரும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரும் ஏற்க வேண்டும்.
13. நடைபெறும் தேர்தல்களில் எந்தப் பொறுப்புக்கான தேர்தலிலானாலும் தேர்தல் துவக்கப்படுவதற்குமுன் ஆணையாளரிடம் எழுத்து மூலமாகத் தக்க ஆதாரத்துடன் தரப்படும் ஆட்சேபனைகளை மட்டுமே ஆணையாளர் பதிவு செய்துகொள்வார். அவ்வித ஆட்சேபனைகள் தலைமைக் கழகத்தால் வசதிக்கேற்பப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
14. தேர்தல் குறித்த மற்ற நடைமுறைகள் அனைத்தும் கழகச் சட்ட திட்டம்—தேர்தல் விதி முறைகளில் கண்டுள்ளவைகளின்படி கடைபிடிக்கப்படுதல் வேண்டும்.

14--7--68-இல் தேர்தல் நடைபெறவேண்டிய நகரங்கள் :--

1. செங்கற்பட்டு
2. தாம்பரம்
3. திருவொற்றியூர்
4. விழுப்புரம்
5. கடலூர்
6. நாகப்பட்டினம்
7. திருவரங்கம்
8. பொள்ளாச்சி
9. இராசபாளையம்
10. திருவில்லிபுத்தூர்
11. விருதுநகர்
12. [illegible]ளையங்கோட்டை
13. [illegible]க்கோட்டை
14. [illegible]டையநல்லூர்

தலைமைக் கழகம் (தி.மு.க.)

குறிப்பு :—வார்டு கிளைகள் [illegible]க்கப் பெற்ற மற்ற பெருநகரக் கிளைகளுக்கான தேர்[illegible] நாள் அடுத்து அறிவிக்கப்படும்.

டெல்லியின்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திரும்பப் பெறவேண்டும்' என்றும் வற்புறுத்தப்பட்டது.

மாணவர் சமுதாயத்துக்கு எந்த வித இடையூறும் ஏற்படா திருக்கும் வகையில், மத்திய பள்ளிகளின் பயிற்று மொழித் தொடர்பான முழுப் பிரச்சினையையும் மறு பரிசீலனை செய்வதாக மத்திய கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென் உறுதி மொழியளித்தார்; ஆனால் மத்திய பள்ளிகளெல்லாம் ஜூன் 24-ஆம் நாள் திறக்கப்பட்டு விட்டன; மறு பரிசீலனைபற்றி யாரும் மூச்சுவிடவில்லை.

இந்தி பேசாத பகுதிகளில் மட்டும் மொத்தம் 53 மத்திய பள்ளிகள் உள்ளன. அவற்றில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இரயில்களை ஓட்ட மாற்று ஏற்பாடு

வேலைக்குத் திரும்பாதவர்கள்மீது நடவடிக்கை

சென்னை, ஜூலை 12—

'பயர்மென்'களின் வேலைநிறுத்தம் காரணமாக இரத்து செய்யப்பட்டிருக்கும் முக்கிய பயணிகள் வண்டிகளையும், கூட்ஸ் வண்டிகளையும், வட்டார இராணுவத்தினரைக் கொண்டு ஓட்டுவது என ரயில்வே போர்டு முடிவு செய்துள்ளது.

"வேலைக்குத் திரும்பாத பயர்மென்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கையையும் பொருட்படுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி இரயில்வே போர்டு முடிவு செய்யும்" என்று ஓர் அதிகாரி கூறினார்.

இரயில்களை ஓட்ட மாற்று ஏற்பாடு தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், மற்ற பகுதிகளில் உள்ள இராணுவத்தினர் இங்கு அழைக்கப்படுவர் என்றும் குறிப்பிட்டார் அந்த அதிகாரி.

மாநில நிர்வாகம்

சீர்திருத்தக் குழுவின் அறிக்கை தாக்கல்

பெங்களூர், ஜூலை 12—

மாநிலங்களின் நிர்வாகம் பற்றி ஆய்வு செய்வதற்காக நிர்வாகச் சீர்திருத்தக் குழு நியமித்திருந்த ஆய்வுக் குழு, தனது அறிக்கையை அளித்துவிட்டது.

"பெரும் எண்ணிக்கையில் அமைச்சரவைகளை அமைப்பதால் திறமையின்மை ஏற்படும்; அரசியல் செல்வாக்கு ஏற்பட்டு, நிர்வாகம்— நீதி— பாரபட்சமற்ற போக்கு ஆகியவை சீர்குலைந்துவிடும்"

என்று ஆய்வுக் குழு, தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பாலர் அரங்கம்

ஜூலை 12, 13, 14-ந் தேதிகளில் மாலை 4 மணிக்கு

'டார்ஜானும் வேங்கைப் பெண்ணும்'

(எம்.ஜி.எம். படம்)

ரோஜா பாக்கு [illegible] புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

13--7--68

குடியேற்றம்

12-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு குளக்கரையில்; தலைவர்: தி. வெ. முருகையன்; பேசுவோர்: ப. உ. சண்முகம் எம்.எல்.சி., பி. கே. முனுசாமி, ஏ. வி. துரைசாமி, பி. செயராமன், எ. க. துரைசாமி, செ. மா. அரங்கசாமி, மு. க. மெய்ஞானம், ஜி. கண்ணாயிரம்.

14--7--68

மதுரை

42-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு கீழ்மதுரை இரயில்வே ஸ்டேஷன் ரோடு அண்ணா திடலில்; தலைவர்; எம். எம. அகமது; பேசுவோர்: டி. கே. சீனிவாசன், கு. திருப்பதி, சொ. காவேரிமணியன், எம். எம். முத்தரசு.

குடந்தை

கே. கே. என். படிப்பகச் சார்பில் கோ. சி. மணி எம்.எல்.சி. அவர்கட்குப் பாராட்டு; மாலை 6-மணிக்கு கீழக் கடலங்குடி தெருவில்; தலைவர்: கோதண்டராமன்; பேசுவோர்; எஸ். கஸ்தூரி, சு. பத்மநாபன், இரா. இராமதாசன், சை. சர்புதீன் பி. வி. செயராமன் எம்.சி., கே. கே. என். தங்கதுரை, கோதண்டபாணி எம்.சி., ப. நாகராசன், கோ. வி. நாராயணசாமி.

திண்டுக்கல்

6-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா மன்றம் அருகில்; தலைவர்: எம் சிங்காரம்; பேசுவோர்: திருவை அண்ணாமலை, ஏ. பாலமுருகேசன், க. அங்குசாமி எம்.சி., என். முத்து, க. வே. வி. இராசன், என். கோபால்.

நெயவேலி

அண்ணா மன்றச் சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 6-மணிக்கு தாண்டவகுப்பம் அறிஞர் திடலில்; தலைவர்: கோ. முருகையன்; பேசுவோர்: எஸ். எஸ். தென்னரசு, எம். செல்வராசு, ச. ஆண்டகுருநாதன், பி. வி. சீனிவாசன், நெ. சி. வெங்கடாசலம், மு. வள்ளியப்பன்.

ஈரோடு

13-வது வட்ட தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றிவிழா; மாலை 7 மணிக்கு கோட்டை பெரியபாவடி மைதானத்தில், தலைவர்: என். சுப்பிரமணியம்; பேசுவோர்: கோவை மு. இராமநாதன், பி.ஏ. சாமிநாதன் எம்.பி., மு. சின்னசாமி எம்.எல்.ஏ., மா. சுப்பிரமணியம், செ. அரங்கராசன் எம்.சி., ஈ. ஏ. மதார்சா, எஸ். கே. பாலுசாமி, எம். ஆர். முத்தையா, ஈ. என். முத்துசாமி இராமசாமி, அ. இளங்கோ.

வாணரப்பேட்டை

தி. மு. க. முதலாண்டு விழா; மாலை 6 மணிக்கு; தலைவர்: எம். கே. மூர்த்தி; பேசுவோர்: இரா. சனார்த்தனம் எம்.ஏ., என். வி. என். செல்வம், எம். ஏ. சண்முகம், செ. முத்து, கே. ஏ. ஜலில், டி. செல்வராசு.

(காலை 8-மணிக்கு, ஏ. சந்திரசேகரன் தலைமையில், கவிஞர் சி. சிவப்பிரகாசம், கு. முருகையன், வழக்கறிஞர் திருநாவுக்கரசு, கோ. புகழேந்தி ஆகியோர் பேசுவர். பகல் 12 மணிக்கு உணவு வழங்கப்படும்.)

சென்னை—மண்ணடி

துறைமுகத் தொகுதி தமிழரசுக் கழக ஆதரவாளர்கள் சார்பில் மாலை 6-30 மணிக்கு [illegible]வே ஜில்ஜ் தெருவில்; தலை[illegible] சுப்பிரமணியம்; பேசு[illegible] ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ம. சி. கிருஷ்ணமூர்த்தி, கொ. மோ. சனார்த்தனம், வெ. புருஷோத்தமன், சி. ஞானமணி.

திருப்பூர்

28-வது வட்டார தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு காங்கயம் பாதையில்; தலைவர்: தி. தா. பெரியசாமி; பேசுவோர்: க. அன்பரசு, சு. துரைசாமி எம்.எல்.ஏ., வே சுப்பிரமணியம், கே. எஸ். மணி எம்.சி., என். கந்தசாமி, மு. க. பழனிச்சாமி.

எச்சரிக்கையுடனிருந்தும் ஏற்பட்ட தீ விபத்து

சென்னை, ஜூலை 12—

எவ்வளவோ முன்னெச்சரிக்கையுடனிருந்தும். நேற்று பிற்பகல் 2-30 மணியளவில், சேனும் பேட்டை—சத்தியமூர்த்தி நகரில் தீவிபத்து ஏற்பட்டு, 162 குடிசைகளுக்கும் அதிகமாக் எரிந்து சாம்பலாகிவிட்டன.

மேலும், நகரின் பல பகுதிகளில், 8 சிறிய தீவிபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நாகை நகர தி. மு. க. தேர்தல்

"நாகப்பட்டினம் பெருநகர தி மு. க. நிர்வாகிகள் தேர்தல், 14—7—68 மாலை 7-மணிக்கு கழகப் பணிமனையில், அறந்தாங்கி இரா. இராசன் அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெறும்"

என்று மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி அறிவிக்கிறார்.

அமைப்புச் செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஜூலை 16: காலை 10 மணி: பட்டுக்கோட்டை;

17: காலை 10 மணி: அருப்புக்கோட்டை;

18: காலை 9 மணி: நாகர் கோவில்.

நலத்துறை அமைச்சர்

எஸ். ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

ஜூலை 12 மாலை 5-மணி: கொக்கராப்பட்டி—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; 6-மணி: தரிஞ்சிபட்டி—உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

ஜூலை 14: விருதுநகர்; 21: ரிஸ்வநத்தம்; 27: மல்லிபுதூர்; 28: முளகுமூடு; ஆக. 4: கலிங்கப்பட்டி; 11: சங்கரலிங்கபுரம்.

திருமண அழைப்பு

அன்பின் மிக்கீர்!

வாழிய நலம். வருகிற 14-7-68 ஞாயிறு அன்று காலை 9-மணியளவில், மதுரை—மணிநகரம் மெயின் ரோடிலுள்ள ஜோதி திருமண மண்டபத்தில்,

மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளர்

எஸ். முத்து, எம்.எல்.சி.

அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் எமது திருமண விழாவினுக்குத் தாங்கள் இதனையே அழைப்பாக ஏற்று வருகைதந்து வாழ்த்துமாறு வேண்டுகிறோம்.

அன்பின்,

தி. சுசீலா, மதுரை-1

மா. பாண்டியன், துணையாசிரியர், 'முரசொலி', சென்னை - 6

காவிரி விபத்து

படகு கவிழ்வதற்குக் காரணமானவர்கள் கைது

திருச்சி, ஜூலை 11—

35 பேர் மட்டுமே செல்லக்கூடிய படகில் சுமார் 70 பேர்கள் வரையில் ஏற்றிச் சென்று படகு கவிழ்வதற்குக் காரணமாக இருந்த படகோட்டிகள் இருவரைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

மற்றொரு படகோட்டியைப் போலீசார் தேடிவருகின்றனர்.

திருச்சியை அடுத்த முசிறிக்கு அருகில் காவிரி ஆற்றில் ஏற்பட்ட இந்தப் படகு விபத்தில் மூழ்கி மாண்டவர்களின் எண்ணிக்கை 23-ஆக உயர்ந்திருக்கிறது. அனைவரும பெண்களாவர்.

13 பெண்களின் பிணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; மற்ற 10 பெண்களின உடல்கள் இன்னும் கிடைக்கவில்லை.

கழகச் சட்டமன்ற உறுப்பினர் அதிர்ச்சி

விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்துவந்த கழகச் சட்டமன்ற உறுப்பினர் எஸ். கே. வடிவேலு, இறந்தவர்களின் சடலங்களைக் கண்டதும் அதிர்ச்சியடைந்து மூர்ச்சையுற்றார்; உடனடியாக அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது.

மத்திய அரசு அலுவல்களில் தாழ்த்தப்பட்டவர் எண்ணிக்கை

ஆராய உயர்தரக் குழு

புதுடில்லி, ஜூலை 12—

இந்திய அரசின் அலுவல்களிலும், அதன் ஆதிக்கத்திலுள்ள நிறுவனங்களிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், மலை சாதியினரும் எந்த அளவுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனா எனபதை ஆராய்வதற்கு உள்துறை அமைச்சா சவாண் தலைமையில், ஓர் உயர்தரக் குழுவை மத்திய அரசு நியமித்திருக்கிறது.

மேலை நாட்டினரும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்க முயற்சி எடுக்கவேண்டும்."

கே. ஏ. மதியழகன்

உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் பேசுகையில் கூறியதாவது:—

"கைத்தறித் தொழிலும், பட்டு நெசவுத தொழிலும மேலோங்கத் தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது; கைத்தறித் தொழில வளர்ச்சிக்கென்று கடன் வழங்க ரிசாவ் பாங்கிமூலம் உத்தரவாதமும் அளித்திருக்கிறது.

விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாகத் திகழ்வது 30, 40 இலட்சம் மக்கள ஈடுபட்டுள்ள தொழிலாகத் துலங்குவது கைத்தறித் தொழிலாகும்.

இந்தத் தொழில்கள் முன்னேற்றமடைய நமது தொழிலமைசசர் அவர்கள், பலவேறு நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பட டிருப்பவர்கள் பழம் பெருமைகளைப் பேசிக்கொண்டிருப்பதை விட்டுவிட்டுக் காலத்தோடு காலத்திற்கேற்ப முன்னேறவேண்டும—புதிய முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

நவீன ஆலைகளோடு போட்டி போடமுடியாத நிலை மட்டுமல்ல —பட்டு நூலுக்குக் கிராககியும் குறைந்திருக்கிறது.

அதேபோல், கைத்தறித் தொழிலுக்கு உதவுவதில் மத்திய அரசுக்கு முழுப் பொறுப்பிருக்கிறது.

'கைத்தறித் துணிகள்மீதுள்ள சுங்க வரியை மத்திய அரசு அகற்ற வேண்டும்' எனறு கோரி, மாநில அரசு போராடிக் கொண்டிருககிறது.

கோவையில் பஞ்சாலைத் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், மத்திய அரசின் சுங்க வரிதான்!

ஏற்றுமதி காரியங்களில் மத்திய அரசு உதவி செய்யலாம— உதவி செய்யவேண்டும்.

தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாடடத்தை ஒழிகக, அரசு சாாபில கூட்டுறவுத துறையில் நூற்பாலைகள் நடைபெறுகின்றன.

கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிா தநதுவருவது கழக அரசு!

கைத்தறித் தொழிலை மத்திய அரசு, இரண்டாந்தரமாகத்தான் நடத்துகிறது; இந்த நிலை மாற வேண்டும்.

சுங்க வரியைக் குறைத்தால் தான் கைத்தறித் தொழிலுக்குள்ள இடையூறுகள் நீங்கி முன்னேறவும் முடியும்.

பல்லாண்டுக்காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தின் நேர்த்தியான கலைத திறனுக்கு அடையாளமாகத் திகழ்நதுவருவது கைத்தறித் தொழிலாகும்; இந்தத் தொழிலை மேலோங்கச் செய்திடவேண்டும்."

சென்னையில்

தென்காசி வெற்றி விழாப்

பொதுக்கூட்டம்

15--7--68 மாலை 7-மணிக்கு

கோடம்பாக்கம் கண்ணு மேஸ்திரி திடலில்

('பேசும் படம்' எதிரில்)

தலைவர்: பவளவண்ணன் (துணைமேயர்)

பேசுவோர்:

அறிஞர் அண்ணா

மற்றும்

அமைச்சர்கள், கழக முன்னணியினர்.

குறிப்பு: — வெற்றி வீரர் கதிரவனும் கலந்துகொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூர்யநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]